OS No.93/2018, நாள்: 22.01.2020

வா.சா.1 ___ பெரியதம்பி குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என்னை 40 ஆண்டுகளுக்கு முன்பே தத்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். தற்போது எனக்கு 62 என்று வயது பிரமாண பத்திரத்தில் கொடுத்துவிட்ட நிலையில் 22 வயது என்று சொன்னால் முதல் விசாரணையில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு முன்பே தத்துகொடுத்துவிட்டார்கள். உண்மை சம்பவம் என்பதால்தான் அதைப்பற்றி வழக்கிலும் முதல் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2007-2008-ல் கோவிலில் சிலைகள் காணாமல் போனது என்றால் சரிதான். மேற்படி சிலைகள் அர்சுணன் என்பவரிடம் கிடைத்து அவர் வருவாய் வாட்டாட்சியரிடம் ஒப்படைத்தார் என்றால் சரிதான். அந்த கோவில் எங்கு உள்ளது என்று வட்டாட்சியருக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் நன்கு தெரியும் என்றால் சரிதான். அந்த சிலைகள் சிதலமடைந்திருப்பதால் அதை சரிசெய்வதற்கு எடுத்து செல்வதற்காக மாவட்ட ஆட்சியரிடமும் வட்டாட்சியரிடமும் அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான். அந்த சிலை சிதலமடைந்திருந்த நிலையில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் வட்டாட்சியர் இந்த பிரதிவாதியின் தந்தை ராமசாமியிடம் தான் ஒப்படைத்தார்கள் என்றால் சொன்னால் பொதுமக்கள் சார்பாகத்தான் அவர் வாங்கி வந்தார். அந்த உத்தரவிலேயே ராமசாமி மற்றும் ஊர் பொதுமக்கள் திரௌபதியம்மன் காளியம்மன் கோவில் தர்மகர்த்தா என்று குறப்பிட்டு கூறியுள்ளார்கள் என்றால் பொதுமக்ளள் சார்பாகத்தான் அவ்வாறு கூறியுள்ளார்கள். மேற்படி ராமசாமியை அறங்காவலர் என்று குறிப்பிட்டுதான் அந்த உத்தரவு பிறப்பத்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த உத்தரவு பி.வா.சா.ஆ.1 ஆகும். மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் வட்டாட்சியர் அர்ச்சுணர் சிலையை காளியம்மன் மற்றும் திரேளபதியம்மன் திருக்கோயில் சார்பாக ராமசாமியிடம்தான் ஒப்படைத்தார் என்றால் அர்ச்சகர்

சார்பாகத்தான் அவர் பெற்றுள்ளார். அந்த ரசீது பி.வா.சா.ஆ.2 ஆகும். அரசு சார்பிலும் அறநிலையத்துறையினர் சார்பிலும் ராமசாமியைத்தான் அறங்காவலராகத்தான் அங்கீகரித்துள்ளனர் என்றும் நான் ஒருபோதும் அவ்வாறு இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த பிரதிவாதி எந்த தேதி பிரச்சனை செய்தார் என்றால் 24.10.2018ம் தேதி பிரச்சினை செய்தார். பிரதவாதி பிரச்சினை செய்ததாக காவல் நிலையத்திலும் வருவாய் துறையினரிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த கோவிலின் தர்மகர்த்தா பிரதிவாதி என்பதால்தான் நான் மேற்சொன்ன இருவரிடம் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கூறும் விதமாக அந்த தேதியில் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை என்றும், பிரதிவாதியுடன் ஊர்பொதுமக்கள் இருப்பதாலும் ஏற்கனவே பிரதிவாதியின் தந்தைக்கும் எனக்கும் உள்ள சொத்து பிரச்சினை காரணமாக இந்த பொய் வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு கோயிலை பொறுத்தவரை பிரதிவாதியின் தந்தை அவர் இறக்குவரை தர்மகர்த்தாவாக இருந்து செயல்பட்டு வந்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. கோவில் சிலை சிதலமைடந்திருந்நது ஒரு குழு அமைக்கப்பட்டு அந்த குழுவின் சார்பாக அவர்தான் புதுப்பித்து கணக்கு வழக்குகளை பார்த்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. ஒவ்வொரு ஊரிலும் ஊர் கவுண்டர் பஞ்சாயத்து தலைவர் மற்றும் முக்கியஸ்தர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். அவர்களை அனுசரித்துதான் ஊரில் விழாக்குழுவும் முக்கியமான கோவில் விசேஷங்களும் நடத்தப்டும் என்றால் சரியல்ல. ராமசாமி இறந்தபின்னிடடு ஊர் பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து பிரதிவாதியை கோவில் தர்மகர்த்தவாக நியமித்து கோவில் கும்பாபிஷேகத்தை 8.2.2019-ம் முதல் 11.2.2019-ம் தேதிவரை நடத்தி முடித்துவிட்டார்கள் என்று சொன்னதால் கும்பாபிஷேகம் முடிந்துவிட்டது அனைவரும் சேர்ந்துதான்

செய்தோம். கும்பிஷேக அழைப்பிதழ் அச்சடித்தபோதே பிரதிவாதியின் பெயரை போட்டுதான் அச்சடித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அனைத்து விவரங்களும் நன்கு அறிந்திருந்தும் பிரதிவாதி மீதுள்ள தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோவில் கும்பாபிஷேக முடிந்துவிட்ட நிலையில் வழக்கிற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கணக்கு புத்தகங்கள் வழக்கிற்கு சம்மந்தமில்லாதது என்றும், அதற்கு இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கோவிலில் நான் எப்போதும் தர்மகர்த்தாவாக இருந்ததில்லை என்றும் ராமசாமி நைனார்தான் தர்மகர்த்தாவாக இருந்த அவருக்கு பின்னிட்டு பிரதிவாதி தர்மகர்த்தாவாக இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்று இருப்பதாக கூறியிருப்பது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அழைகழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.